DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC.208/2023

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.மணிகண்டன் | Caste: | |
| Father's Name | :முத்துராமலிங்கம் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

25.05.2026 – 11.15 AM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் புதுக்கோட்டையில் குடியிருந்து ஹோட்டல் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரி எனக்கு சித்தப்பாதான். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 08.00 மணியளவில் அதிகாலை 02.15 மணியளவில் நான் என் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது கூட்டமாக 20க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

2. நான் கூட்டத்திற்குள் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ என்னை கீழே தள்ளிவிட்டார்கள். நான் கீழே விழுந்ததில் எனக்கு லேசான காயம்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் கமுதி அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1. நான் 13.03.2023 அன்று அதிகாலை 02.15 மணியளவில் நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த எனது மச்சான் மணிகண்டன் மற்றும் மணி ஆகியோருடன் சிங்கம்புலியாம்பட்டி ஊர் கோவில் அருகே வந்து கொண்டிருந்தோம் என்றும் அப்போது ஆஜர் எதிரி முத்துராமலிங்கம் அங்கு நின்றுகொண்டு என்னை பார்த்து ஆபாசமாக பேசி இரும்பு கம்பியை எடுத்து எனது பின்பக்க தலையில் அடித்து ரத்தகாயத்தை ஏற்படுத்தினார் என்றும் அப்போது என்னுடன் வந்த மணிகண்டன் மற்றும் மணி அருகில் இருந்த அண்டாமுருகன் மற்றும் ரமேஷ் ஆகியோர் சத்தம் போடவும் ஆஜர் எதிரி கையில் வைத்திருந்த இரும்பு கம்பியை காண்பித்து கொலை மிரட்டல் விடுத்ததாக புகார் வாக்குமூலத்திலும் போலீசார் விசாரித்தபோதும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனக்கு சித்தப்பா உறவு முறை என்பதால் எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு வழக்கிலிருந்து எதிரியைக் காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:42:16 +0530